The Tanjore
Tenants and Pannaiyal Protection Act, 1952.

(Including Rules & forms.)

தஞ்சாவூர் சாகுபடிக்காரர்கள், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், 1952.

(ரூல்களும், நமூனாக்களும் உள்பட)

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்.,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

1953

[விலை 0—10—0.

உ

தஞ்சாவூர் சாகுபடியாளர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்.

(1952ம்-ஸ்த்த XIV-வது சட்டம்.)

தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாய நிலைமையைச் சீர்திருத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம்.

தஞ்சாவூர் ஜில்லாவிலே ஒருபுரம் நிலச் சொந்தக்காரர்களுக்கும் அவர்களுடைய ஏஜெண்டுகளுக்கும், மற்றொருபுறம் சாகுபடிக்காரர்களுக்கும் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் இடையேயுள்ள நல்லுறவு கெட்டுப்போய், அதன் விளைவாக சாகுபடிக்காரர்கள் வெளியேற்றப்படுதல், பண்ணைத் தொழிலாளர்கள் விலக்கப்படுதல், விவசாயக் குற்றங்கள், கலவரங்கள் ஆகிய இவை நேர்ந்திருக்கிறபடியாலும்,

இத்தகைய ஒரு சூழ்நிலையில் விவசாய விளைவு சீரழிந்து போகக்கூடுமென அச்சம் கொள்ளப்பட்டிருக்கிறபடியாலும்,

மேற்சொன்ன நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு, தஞ்சாவூர் சாகுபடிக்காரர்களையும் பண்ணையாள்களையும் (பாதுகாப்பு) பற்றிய (சென்னை 1952-ம் ஸ்த்து IV-வது அவசரச் சட்டமாகிய) 1952-ம் ஸ்த்திய அவசரச்சட்டமும், தஞ்சாவூர் சாகுபடிக்காரர்களையும் பண்ணையாள்களையும் (பாதுகாப்பது) பற்றிய (சென்னை 1952-ம் ஸ்த்து V-வது அவசரச்சட்டமாகிய) 1952-ஸ்த்திய திருத்த அவசரச் சட்டமும் சென்னை கவர்னரால் பிரகடனம் செய்யப்பட்டபடியாலும்,

---

சென்னைச் சட்டசிருபண சபையாரின் இச் சட்டமானது, 1952-ம் டிஸம்பர்மீ 21ம் தேதியன்று ராஷ்டிரபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் IV-B-வது பாகத்தின் ஸப்ளிமென்ட், 31—12—1952 செ. 15 (2).

ஷை அவசரச் சட்டங்களின் செல்திறனைக்குறித்து ஏற்பட்டிருந்த சில சந்தேகங்களை நிவர்த்தி செய்யும்பொருட்டு, சென்னை கவர்னர் அரசியலமைப்பின் 213-வது பிரிவைச் சேர்ந்த(1)பகுதியின் புரோவைஸோவை அனுசரித்து ராஷ்டிரபதியின் உத்தரவைப் பெற்றுக்கொண்ட பிறகு, தஞ்சாவூர் சாகுபடிக்காரர்களையும் பண்ணையாள்களையும் பாதுகாப்பது பற்றிய (சென்னை 1952-ம் வருஷத்து VI-வது அவசரச் சட்டமாகிய) 1952-ம் வருஷத்திய (2-ம் நி) அவசரச் சட்டத்தை— இது மேற்சொன்ன அவசரச் சட்டங்களை ரத்து செய்து அவற்றில் கண்டுள்ள ஷரத்துக்களை மீண்டும் சட்டமாகச் செய்தது—பிரகடனம் செய்தபடியாலும்,

சென்னை 1952-ம் வருஷத்து VI-வது அவசரச் சட்டத்துக்குப் பதிலாக இந்த ராஜ்ய சட்ட நிரூபண சபையின் சட்டம் ஒன்றை அமைத்துக்கொள்வது அவசியமாயிருக்கிறபடியாலும் இதனால் விதிக்கப்படுவது என்னவென்றால்:—

1. **பெயரும் தொடக்கமும்:**—(1) இந்தச் சட்டம், தஞ்சாவூர் சாகுபடிக்காரர்களையும் பண்ணையாள்களையும் பாதுகாப்பது பற்றிய 1952-வருஷத்திய சட்டம் என்று பெயர் பெறும்.

(2) இது தஞ்சாவூர் ஜில்லா முழுவதிலும் 1952-வருஷ ஆகஸ்ட்-மீ 23-ம் தேதியன்று அமுலுக்கு வந்துவிட்டிருப்பதாகக் கருதப்படும்; அதை அடுத்தாற்போல், சென்னை ராஜ்யத்திலுள்ள வேறு யாதொரு பிரதேசத்திலும், அரசாங்கத்தார் விளம்பரம் மூலமாக நியமிக்கக்கூடிய தேதியன்று, இது அமுலுக்கு வரத் தொடங்கும்;

ஆனால், அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக அதில் குறிப்பிடப்படக்கூடிய தேதியிலிருந்து தஞ்சாவூர் ஜில்லாவிலே குறிப்பிட்ட யாதொரு பிரதேசத்துக்காவது வேறு எங்கேயாகினும் இந்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய குறிப்பிட்ட வேறு யாதொரு பிரதேசத்துக்காவது இந்தச் சட்டம் பிரயோகப்படக்கூடாதெனக் கட்டளையிடலாம்.

2. **அர்த்தம்:**—இந்தச் சட்டத்திலே, சங்கதியினாலாவது சந்தர்ப்பத்தினாலாவது விரோதம் ஒன்றும் இராவிட்டால்,—

(a) "விவசாய வருஷம்" என்பது மே-மீ 1-ம் தேதியன்று தொடங்கும் வருஷம் என்று பொருள்படும்;

(b) "இச் சட்டம் செலாவணியாகத் தொடங்குவது" அல்லது "இத்தொடங்கும் தேதி" என்பது, தஞ்சாவூர் ஜில்லா முழுவதன் விஷயமாக, 1952-ரு ஆகஸ்ட்-மீ 23-ம் தேதியென்றும், வேறு யாதொரு பிரதேசம் விஷயமாக, 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட விளம்பர மூலமாக நியமிக்கப்பட்ட தேதியென்றும் பொருள்படும்;

(c) யாதொரு பிரதேசம் சம்பந்தமாக "சமரச உத்தியோகஸ்தர்" என்பது, அப்பிரதேசத்துக்காக இந்தச் சட்டப்படி நியமிக்கப்பட்ட சமரச உத்தியோகஸ்தர் என்றும்; அத்தகைய உத்தியோகஸ்தர் எவரும் நியமிக்கப்பட்டிராவிட்டால், அப்பிரதேசம் விஷயமாக விசாரணையதிகாரமுள்ள தாசில்தாரர் என்றும் பொருள்படும்;

(d) "சாகுபடி செய்கிற சாகுபடிக்காரர்" அல்லது "சாகுபடிக்காரர்" என்பது, வெளிப்படையாகவோ குறிப்பாகவோ உள்ள சாகுபடி உடன்படிக்கை ஒன்றின்படி, மற்றொருவருக்குச் சொந்தமான யாதொரு நிலத்தைச் சாகுபடி செய்யும் விஷயத்தில் தமது சொந்த தேக உழைப்பையோ தமது குடும்பத்தாருடைய உழைப்பையோ ஈடுபடுத்துகிற யாதொரு நபர் என்று பொருள்படும்; மேலும் அதில், அந்த நபருடைய வாரிசுகள் என்பதும் அடங்கும்; ஆனால் அதில் வெறும் இடைப்பட்டவர் (Intermediary) அல்லது அவருடைய வாரிசுகள் என்பது அடங்காது;

(e) "அரசாங்கம்" என்பது இந்த ராஜ்ய அரசாங்கம் என்று பொருள்படும்;

(f) "மொத்த மகசூல்" என்பதில், போரடியில் கிடைக்கிற விளைவும் அடங்கும்;

(g) "நிலச் சொந்தக்காரர்" என்பது, சாகுபடிக்காரரால் சாகுபடி செய்வதற்காக நிலத்தை விடும் நிலச் சொந்தக்காரரையாவது அவரிடமிருந்து உரிமைகளை அடைகிற நபரையாவது குறிக்கும். மேலும் அதில், ஷை சொந்தக்காரருடைய அல்லது அவருக்குட்பட்டு உரிமைகளை அடைகிற நபருடைய

ஒப்படைதாரர்கள், வாரிசுகள் அல்லது சட்ட சம்பந்தமான இதர பிரதிநிதிகள் என்பதும் அடங்கும்;

(h) "விளம்பரம்" என்பது **போர்ட் ஸெய்ண்ட் ஜார்ஜ் கெஜெட்டில்** பிரசுரிக்கப்படுகிற ஒரு விளம்பரம் என்று பொருள்படும்;

(i) "பண்ணையாள்" என்பது யாதொரு விவசாய வருஷம் முழுவதிலும் அவச்யமாயிருக்கிற போதெல்லாம் பண்ணையைக் கவனித்துக்கொள்ளவும் நிலத்தில் சகல சாகுபடி வேலை செய்யவும் நிலச் சொந்தக்காரரால் அல்லது சாகுபடி செய்கிற சாகுபடிக்காரரால் அமர்த்திக்கொள்ளப்படுகிற யாதொரு நபர் என்று பொருள்படும்; ஆனல், சிற்சில சமயங்களில் மட்டுமே அல்லது குறிப்பிட்ட ஒரு வேலைக்காக மட்டுமே அமர்த்திக்கொள்ளப்படுகிற ஒருவர் என்பது அதில் அடங்காது;

(j) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது இந்தச் சட்டத்தின் படிச் செய்யப்பட்ட விதிகளினல் நிர்ணயிக்கப்பட்ட என்று பொருள்படும்;

(k) 'ரெண்ட்' (Rent) "வாரம்" என்பதில், மாசூலிலே நிலச்சொந்தக்காரருக்குச் செலுத்தப்படதக்க பங்கு ஏதாகிலும் இருந்தால் அந்தப்பங்கு என்பதும் அடங்கும்;

(l) யாதொரு பிரதேசம் சம்பந்தமாக "ரெவினியூ கோர்ட்" என்பது அப்பிரதேசத்துக்காக இந்த சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ரெவினியூ கோர்ட் என்றும், ரெவின்யூ கோர்ட் எதுவும் அவ்வாறு அமைக்கப்பட்டிராத இடத்திலே அப்பிரதேசத்தின் விசாரணை அதிகாரமுள்ள ரெவினியூ டிவிஷனல் ஆபீஸரின் கோர்ட் என்று பொருள்படும்.

(m) "இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட" தேதி அல்லது காலத்தைக் குறிக்கும் சகல இடங்களிலும், இச்சட்டத்திற்கு ராஷ்டிரபதி அளித்த அங்கீகாரம் **போர்ட் ஸெய்ண்ட் ஜார்ஜ் கெஜெட்டில்** எந்தத் தேதியன்று முதலில் பிரசுரிக்கப்பட்டதோ (அது 21—12—'52) அந்த தேதியைக் குறிப்பதாக அர்த்தம் பண்ணவேண்டும்.

3. **காண்ட்ராக்ட், இதர சட்டங்கள் முதலியவற்றை இந்தச் சட்டம் ரத்து செய்யுமென்பது**—இந்தச் சட்டத்தில் கண்ட ஷரத்துக்கள்—

(a) ஏற்கனவே ஏற்பட்டிருக்கிற யாதொருசட்டம், ஆதாரம், வழக்கம், உடன்படிக்கை அல்லது ஒரு கோர்ட்டின் டிக்கிரி அல்லது உத்தரவில் இதற்கு விரோதமாய் என்ன சொல்லியிருந்தபோதிலும், அதனால் இது பாதிக்கப்படாமல் இதுவே செல்லுபடியுள்ளதாகும்; ஆனால்,

(b) யாதொரு கிராமத்திலே நிலச் சொந்தக்காரர் ஒருவரால் கைப்பற்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற நிலமானது, சர்க்கார் ஆதாரத்திலிருந்து பாசனம் பெறும் நஞ்சை புஞ்சை நிலம் ஒரு வேலிக்கு (6⅔ ஏக்கராவுக்கு) மேற்படாவிட்டாலோ, அல்லது சர்க்கார் ஆதாரத்திலிருந்து பாசனம் பெறாத புஞ்சை நிலம் மூன்று வேலிக்கு (இருபது ஏக்கராவுக்கு) மேற்படாவிட்டால், அத்தகைய நிலம் விஷயமாய் இச்சட்ட ஷரத்துக்கள் உபயோகிக்கப்படமாட்டா.

4. **சமரச உத்தியோகஸ்தர்களின் நியமனம்:—** அரசாங்கத்தாராவது அவர்களிடமிருந்து இதன்பொருட்டு அதிகாரம் பெற்றிருக்கிற யாதொரு அதிகாரியாவது உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாக, இந்தச் சட்டத்தினால் சமரச உத்தியோகஸ்தர் ஒருவரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள அலுவல்களைச் செய்வதற்காக சமரச உத்தியோகஸ்தராயிருக்கும்படி அவ்வுத்தரவில் குறிப்பிடப்பட்ட யாதொரு பிரதேசத்துக்காக எவரையாகிலும் நியமிக்கலாம்.

5. **ரெவினியு கோர்ட்டுக்களை அமைப்பது:—** அரசாங்கத்தார் விளம்பரம் பிறப்பித்து அதன் மூலமாக, இந்தச் சட்டத்தினால் ஒரு ரெவினியு கோர்ட்டினிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள அலுவல்களைச் செய்யும் காரியத்துக்காக, அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கிற யாதொரு பிரதேசத்துக்காக ரெவினியு கோர்ட் ஒன்றை அமைக்கலாம்; ரெவினியு டிவிஷனல் ஆபிஸரின் அந்தஸ்துக்குக்குறையாத அந்தஸ்துள்ள ஓர் உத்தியோகஸ்தர் அக் கோர்ட்டை நடத்த வேண்டும்.

6. **சாகுபடி செய்கிற சாகுபடிக்காரர்களுக்கு ஐந்தாண்டுக் கேடு உரிமை :—** (1). 1951-ம் ஹு டிஸெம்பர்-மீ 1-ம் தேதியன்று யாதொரு நிலத்தின் அனுபோகமுடைய வராயிருந்த சாகுபடி செய்கிற சாகுபடிக்காரர் ஒவ்வொரு வரும், 1952-53-ம் விவசாய வருஷத்தின் தொடக்கத்திலிருந்து ஐந்து வருஷகாலம் முடிவடைகிற வரையில், இந்தச்சட்டத் தின் ஷரத்துக்களுக்குட்பட்டு, அத்தகைய சாகுபடிக்கார ராக ஷெ நிலத்தை அனுபோகத்தில் வைத்துக்கொள்ள உரி மையுள்ளவராவார்; அத்தகைய சாகுபடிக்காரர் இந்தச் சட் டத்தின் தொடக்கத்தின்போது ஷெ நிலத்தில் அனுபோக முடையவராயிராவிட்டால், அவர், சமரச, உத்தியோகஸ் தருக்கு விண்ணப்பம் செய்து கொள்வதன்பேரில், அத்தகைய அனுபோகம் மீண்டும் தனக்குக் கொடுக்கப்பெற உரிமை உள்ளவராவர்; அப்போது, 1951-ம் ஹு டிஸெம்பர்-மீ 1-ம் தேதிக்குப் பிறகு சாகுபடிக்காரராக அனுபோகம் கொடுக்கப் பெற்ற வேறொரு நபர் அந்த நிலத்திலிருந்து வெளியேற்றப் படுவார்.

(2) 1950-51-ம் விவசாய வருஷத்திலே யாதொரு நிலத் தின் அனுபோக முடையவராயிருந்தவரும் 1951-ம் ஹு டிஸெம்பர்-மீ 1-ம் தேதியன்று அதன் அனுபோகம் அற்று இருந்தவருமான சாகுபடி செய்கிற சாகுபடிகாரர் ஒவ்வொரு வரும், சமரச உத்தியோகஸ்தருக்கு விண்ணப்பம் செய்து கொள்வதன்பேரில், 1951-ம் ஹு டிஸெம்பர்-மீ 1-ம் தேதி யன்றாவது அதற்கு முன்பாவது ஷெ நிலத்தின் அனுபோகம் வேறொரு சாகுபடிக்காரரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்து அவர் இந்தச் சட்டத்தின் தொடக்கத்துக்கு முன்பு அந்த நிலத் திலே விளைச்சல் செய்திருக்கிற சந்தர்பங்களில் தவிர மற்ற சந்தர்பங்களில், அத்தகைய அனுபோகம் மீண்டும் தனக்குக் கொடுக்கப்பெற உரிமை உள்ளவராவார்.

மேற்சொன்னவாறு மீண்டும் அனுபோகம் ஒப்புவிக்கப் பெற்ற சாகுபடி செய்கிற சாகுபடிக்காரர் ஒருவர், (1) உட் பிரிவில் குறிப்பிட்டிருக்கிற ஐந்தாண்டுக் காலம் முடிவடை கிற வரையில் இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களுக்குட்பட்டு அத்தகைய சாகுபடிக்காரராக (நிலத்தை) அனுபோகத்தில் வைத்துக்கொள்ள உரிமை உள்ளவராவார்.

(3), (1) உட்பிரிவின்படியாவது (2) உட்பிரிவின்படியாவது சமரச உத்தியோகஸ்தர் ஒருவருக்குச் செய்துகொள்ளப்படுகிற விண்ணப்பம் ஒவ்வொன்றையும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திலிருந்து முப்பது தினங்களுக்குள் செய்துகொள்ளவேண்டும்; அது ஒரு ரூபாய் மதிப்புள்ள கோர்ட் பீஸ் ஸ்டாம்பு கொண்டதாயிருக்கவேண்டும்.

ஆனல், விண்ணப்பதார் மேற்சொன்ன முப்பதுதினக் கால அளவுக்குள் விண்ணப்பம் செய்துகொள்ளாமற்போனதற்குத் தமக்குப் போதிய காரணமிருந்ததாக சமரச உத்தியோகஸ்தருக்குச் சந்தேகமற எடுத்துக்காட்டினல், அந்தக் கால அளவுக்குப் பிறகும் ஷை விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

விவரணம்:- இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்குமுன் ஒரு விண்ணப்பம் உரிய காலத்தில் கொடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை யென்னும் காரணத்தினல் நிராகரிக்கப்பட்டிருந்தால் இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு மேற்சொன்ன புரோவைஸோப்படி விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தடையேற்படாது.

(4) (3) உட்பிரிவின்படிக்கான விண்ணப்பமொன்றை பெற்றுக்கொள்வதன்பேரில், சமரச உத்தியோகஸ்தரானவர், நிலச் சொந்தக்காரரும் நிலத்தின் அனுபோகமுடைய சாகுபடிக்காரர் எவராகிலும் இருந்தால் அவரும் தங்களுடைய முறையீடுகளைத் தெரிவித்துக்கொள்ள அவர்களுக்கு நியாயமான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த பிறகு, பிரஸ்தாப விஷயத்தைக் குறித்து சுருக்கமான விசாரணை நடத்தி, விண்ணப்பத்தில் கண்ட கோரிக்கையை அனுமதித்தோ விண்ணப்பத்தை நிராகரித்தோ உத்தரவு பிறப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் கண்ட கோரிக்கையை அனுமதித்து உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும்போது, சமரச உத்தியோகஸ்தரானவர் பின்வரும் விஷயங்கள் பற்றிய நிபந்தனைகள் உட்பட, தங்களை யென்றும் நியாயமானவை யென்றும் தாம் கருதக்கூடிய நிபந்தனைகளையும் விதிக்கலாம்; அவ்விஷயங்களாவன:—

(i) விண்ணப்பதாரர் நிலச் சொந்தக்காரருக்கு ஏற்கெனவே கொடுக்கவேண்டியதும், ஒரு வருஷ 'ரெண்ட்'

தொகைக்கு மேற்படாததுமான யாதொரு 'ரெண்ட்' பாக்கியை அவர் கொடுத்துவிடுவது;

(ii) வருஷத்தின் எந்தப் பாகத்திலே விண்ணப்பதாரர் நிலத்தில் அநுபோகமுடையவராக இருக்கவில்லையோ அந்தப் பாகத்தில், நிலத்தில் உழைப்பு சம்பந்தமாக ஏற்பட்டசெலவுகளுக்கும் மற்ற செலவுகளுக்கும் அவைகளைச் செய்த நிலச் சொந்தக்காரருக்கோ அல்லது விண்ணப்பதேதியில் அநுபோகத்திலிருந்த சாகுபடிக்காரருக்கோ, சந்தர்பத்துக்கேற்ப ஷை செலவுகள் சம்பந்தமாக, கட்சிக்காரர்களுக் கிடையே திரும்பச் செலுத்துவதற்குறிய வீதங்களைப்பற்றியும் விதத்தைபற்றியும் உடன்படிக்கை எதுவும் ஏற்பட்டிராவிட்டால், அவ்வாறு திரும்பச் செலுத்துவது.

விளக்கம். (ii) பகுதியில் ஏற்பாடு செய்துள்ளபடி திரும்பச் செலுத்துவது சம்பந்தமாக யாதொரு நிபந்தனையை விதிப்பதற்குப் பதிலாக, சமரச உத்தியோகஸ்தரானவர், தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி, உத்தரவு பிறப்பிக்கப்படுகிற காலத்தில் ஷை நிலத்தின்மேல் விளைத்திருக்கிற யாதொரு பயிர் அறுவடை செய்யப்பட்டாகிற வரையில், அந்நிலத்தை மீண்டும் விண்ணப்பதாரருடைய ஆதீனத்தில் ஒப்புவிப்பதைத் தள்ளிப்போடலாம்.

(5). (4) உட்பிரிவின்படி சமரச உத்தியோகஸ்தர் பிறப்பித்த யாதொரு உத்திரவின் பேரிலாவது அதனால் விதிக்கப்பட்ட யாதொரு நிபந்தனையின் பேரிலாவது அவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள், அல்லது இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு கொடுத்துக்கொள்ளப்படுகிற ஒரு அப்பீலின் விஷயத்தில், அவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து முப்பது தினங்களுக்குள், ரெவின்யூ கோர்ட்டுக்கு அப்பீல் உண்டு. ஆனால், ஷை கோர்ட்டார் யாதொரு விஷயம்பற்றி விசேஷ சந்தர்ப்பங்களில் ஷை காலத்துக்குள் அப்பீல் செய்வதில் நேரிடுகிற கால தாமதத்தை மன்னித்து விட்டால், அந்தக்காலத்துக்கு அப்பாலும் அப்பீல் உண்டு.

அப்பீல் யதால்து ஒரு ரூபாய் மதிப்புள்ள கோர்ட்டுபீஸ் ஸ்டாம்பு கொண்டதாக இருக்கவேண்டும்; அதன் பேரில் ரெவின்யூ கோர்ட்டாருடைய தீர்ப்பு இறுதியானதாகும்.

(6) விண்ணப்பதாரர் ஒரு வருஷ 'ரெண்டு'க்கு மேற்பட்டுள்ள யாதொரு 'ரெண்டு' பாக்கியைச் செலுத்தவேண்டுமென, இச்சட்டம் நிறைவேற்றபடுவதற்கு முன் விதிக்கப்பட்டிருந்தால் அதைக் குறித்து விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்பேரில், செலுத்தப்படவேண்டிய 'ரெண்'டை ஒரு வருஷ 'ரெண்டு'க்கு மேற்படாமல் குறைக்கும்பொருட்டு, சந்தர்ப்பத்திற்கேற்ப, சமரச உத்தியோகஸ்தராலாவது, ரெவின்யூ கோர்ட்டாராலாவது மாற்றியமைக்கப்படவேண்டும்.

ஆனால், சாகுபடிக்காரர் இச்சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன் யாதொரு தொகையைச் செலுத்தியிருந்தால், அதைத் திருப்பிக்கொடுக்கும்படிக் கேட்கலாகாது.

7. **சகல சாகுபடி ஏற்பாடுகளுக்கும் பிரயோகப்படத்தக்க ஷரத்துக்கள்:**— சாகுபடி செய்கிற சாகுபடிக்காரர் ஒவ்வொருவரும் அடியிற்கண்ட ஷரத்துகளின் பேரில் நிலத்தைக் சாகுபடிக்கு வைத்திருக்கவேண்டும்:—

(a) 8-வது பிரிவைச் சேர்ந்த (4) (a) உட்பிரிவின் ஷரத்துக்களுக்குட்பட்டு, நிலச் சொந்தக்காரருக்கும் சாகுபடிகாரருக்குமிடையில் மாசூலைப் பங்கிட்டுக் கொள்ளும் முறையிலுள்ள சாகுபடிகளிலும், அவ்வாறே நிலச் சொந்தக்காரரும், சாகுபடிக்காரரும் பங்கிட்டுக்கொள்ள ஒத்துக்கொள்ளும் இதர சாகுபடி முறைகளிலும், பிரஸ்தாப நிலத்தில் எந்தப் பயிர் அல்லது பயிர்களை விளைவிக்கவேண்டுமென்பதை நிச்சயிக்க நிலச்சொந்தக்காரர்கள் உரிமையுள்ளவராவார்.

(b) கீழே (c) பகுதிக்குட்பட்டு, விதை சம்பாதித்துக் கொள்ளுதல், நிலம் உழுதல் ஆகிய இவை உட்பட, சாகுபடி சம்பந்தமான சகல உழைப்புக்கும் செலவுகளுக்கும் சாகுபடிக்காரரே பொறுப்பாளியாவார்.

(c) பிரஸ்தாப நிலத்தில் உபயோகிக்கப்பட்ட இயற்கையான சகல எரு வகைகளுக்காகவும் பிடித்த மொத்தச் செலவையும் சாகுபடிக்காரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால், ரசாயன உரங்கள், இதர செயற்கை எரு வகைகள், வேர்க்கடலைப் பிண்ணாக்கு ஆகிய இவை அந்த நிலத்தில் உபயோகிக்கப்பட்டால், அதன் செலவை, நிலச் சொந்தக்காரருக்கும்

சாகுபடிக்காரருக்கும் இடையில், பொத்த மாசூல் என்ன வீதாசாரப்படி அவர்களுக்கிடையில் பங்கிடப்படுகிறதோ அதே வீதாசாரப்படி, அதாவது, ஐந்தில் மூன்று பாகம் நிலச்சொந்தக்காரருக்கும் ஐந்தில் இரண்டு பாகம் சாகுபடிகாரருக்கும் என்னும் வீதாசாரப்படியாவது அல்லது 8-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலோ (2) உட்பிரிவிலோ ஏற்பாடு செய்திருக்கிறபடி கட்சிக்காரர்கள் உடன் பட்டிருக்கக்கூடிய இதர வீதாசாரப்படியாவது, பங்கிடவேண்டும்.

(d) பிரஸ்தாப நிலம் விஷயமாய்த் தண்ணீர் வரி ஏதாகிலும் விதிக்கப்பட்டால் அந்த வரி உட்பட, அந்த நிலம் விஷயமாய் அரசாங்கத்தாருக்கும் பிரதேச அதிகார சபைகளுக்கும் செலுத்தப்படத்தக்க சகல தொகைகளேயும், ஸ்தலக் காரியங்களுக்காக மாமூலாய்ச் செலுத்தப்படத்தக்க சகல சகாயத் தொகைகளேயும் பணங்களேயும் நிலச் சொந்தக்காரர் செலுத்துவதற்கு கடமைப்பட்டவராவார்.

(e) வாய்க்கால்களில் சேர்ந்துவிட்ட மண்ணே அப்புறப்படுத்துவதற்காகவும் அவற்றைச் சீர்திருத்துவதற்காகவுமான பொறுப்பானது, வயல்-வாய்க்கால்களல்லாத மற்ற வாய்க்கால்கள் விஷயத்தில் நிலச் சொந்தக்காரரையும், வயல்-வாய்க்கால்கள் விஷயத்தில் சாகுபடிக்காரரையும் சேர்ந்ததாகும்.

(f) 6-வது பிரிவில் குறிப்பிட்டிருக்கிற ஐந்தாண்டுக் காலம் முடிவடைந்ததும் நிலச் சொந்தக்காரர் சாகுபடி ஏற்பாட்டை முடித்துவிட விரும்பிஞல், அவர் சாகுபடியின் கடைசி வருஷம் முடிவடைவதற்குப் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாமல் முன்னதாக சகுபடிக்காரருக்கு எழுத்து மூலமான நோட்டீஸ் கொடுக்கவேண்டும். சாகுபடி ஏற்பாடு அவ்வாறு முடிவு செய்யப்படாவிட்டால், சாகுபடிக்காரரானவர், இப்பிரிவிலும் அடியிற்கண்ட பிரிவுகளிலும் சொல்லப்பட்டுள்ள ஷரத்துக்களுக்கும் நிபந்தனைகளுக்குமுட்பட்டு, அல்லது கட்சிக்காரர்கள் தங்களுக்குள் செய்துகொண்டிருக்கும் இதைவிட சாகுபடிக்காரருக்கு அனுகூலம் குறைந்ததாக இல்லாத வேறு ஷரத்துக்களுக்கும் நிபந்தனைகளுக்குமுட்பட்டு, மீண்டும் ஐந்தாண்டுக் காலம் வரை சாகுபடிக்காரர் என்னும் முறைமையில் நிலத்தைச் அனுபோகத்தில் வைத்துக் கொள்ள உரிமையுள்ளவராவார்.

(g) மேற்சொன்ன ஐந்தாண்டுக் கால அளவிற்குள் யாதொரு விவசாய வருஷத்தின் கடைசியோடு முடிவடைகிற ஆறு மாதத்துக்கு குறையாத எழுத்து மூலமான நோட்டீஸை நிலச் சொந்தக்காரருக்குக் சாகுபடிக்காரர் கொடுப்பது மூலமாக அவ்வருஷக் கடைசியிலேயே சாகுபடி ஏற்பாட்டை முடிவுசெய்துகொள்ளலாம்.

8. **சாகுபடிக்காரர்களால் செலுத்தப்படத்தக்க 'ரேண்ட்':—** (1) சாகுபடிக்காரருக்கும் நிலச் சொந்தக்காரருக்குமிடையில் மாசூல் பங்கிடப்படவேண்டியதாயிருந்தால், நெல்லின் விஷயத்தில் அறுவடை செய்வதற்கும் 'போரடிப்பதற்கும் பிடித்த எல்லாச் செலவுகளையும் கழித்துக்கொண்டும், வேறு பயிர்களாயின் அவைபோன்ற செலவுகள் இருந்தால் அவைகளையும் கழித்துக்கொண்ட பிறகு, மொத்த மாசூலில் எஞ்சி நிற்கிற பாகத்தில் ஐந்தில் இரண்டு பாகத்தை (அல்லது அதைவிட அதிகமான விதாசாரத்துக்குக் கட்சிக்காரர்கள் ஒப்புக்கொண்டிருந்தால் அந்த விதாசாரத்தை) பெறுவதற்குச் சாகுபடிக்காரர் உரிமையுள்ளவராவார்.

சாகுபடிக்காரர், வைக்கோல் எதுவாகிலும் கிடைத்தால் நிலச் சொந்தக்காரருக்கு மாமூலாகக் கொடுக்கப்படுகிற தலைச்சுமை வைக்கோல் கட்டுகளைக் கொடுத்துவிட்டு மற்ற வைக்கோலைத் தாமேவைத்துக்கொள்வதற்கு உரிமையுள்ளவராவார்.

மாசூல் தானிய ரூபமாயிருந்தால், மாமூலான களத்துமேட்டிலேயே அதைச் சாகுபடிகாரருக்கும் நிலச் சொந்தக்காரருக்குமிடையே பங்கிடவேண்டும்; மாசூல் சரியான காலத்தில் கிரமமாகப் பங்கிடப்படுவதைத் தடுக்கும் விதமாக அக்காலத்தில் மகசூலின் எந்தப் பாகத்தையும் களத்து மேட்டிலிருந்து அப்புறபடுத்தக்கூடாது.

(2) பயிரிடப்பட்ட மாசூலைப் பங்கிடும் முறையில்லாத வேறு சாகுபடிமுறையில், Rent (ரெண்ட்) க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் சாகுபடிக்காரர் நிலச் சொந்தக்காரருக்கு (வைக்கோல் எதுவாகிலும் கிடைத்தால், மாமூலாகக்கொடுக்கிற வைக்கோல் கட்டுகளுடன்கூட) நெல்லின் விஷயத்தில் அறுவடை செய்வதற்கும், போரடிப்பதற்கும் பிடித்த எல்லாச் செலவுகளையும், வேறு யாதொரு பயிரின் விஷயத்தில் அவை

போன்ற எவையேனும் செலவுகளிலிருந்தால் அவைகளேயும் கழித்துக்கொண்ட பிறகு, ஷெ நிலத்தின் சாதாரண மொத்த மாசூலில் எஞ்சி நிற்கிற பாகத்தில் ஐந்தில் மூன்று பாகத்தை யாவது (அதற்குக் குறைவான வீதாசாரத்துக்குக் கட்சிக் காரர்கள் ஒப்புக்கொண்டிருந்தால் அந்த வீதாசாரத்தை யாவது) கொடுக்கக் கடமைப்பட்டவராவார்.

'ரெண்ட்' ரொக்கமாகச் செலுத்தப்பட வேண்டியிருந் தால், மேற்சொன்ன ஐந்தில் மூன்று பாகத்தின் அல்லது ஷெ அதற்குக் குறைந்த வீதாசாரமுள்ள பாகத்தின் மதிப்பை, பொருத்தமான ஐந்தாண்டுக் காலத்துக்கு அடுத்து முந்தி யுள்ள வருஷத்தில் நிலவரமாயிருந்த விலைப்படிக் கணக்கிட வேண்டும்.

தானியரூபமாக 'ரெண்ட்' கொடுப்பதாயிருந்தால், ஒவ் வொரு அருவடையின் போதும், மாமூலான களத்துமேட்டி லேயே அதை உடனடியாக நிலச் சொந்தக்காரருக்குக் கொடுத்துவிடவேண்டும்.

(3) மாசூலைப் பயிரிடுவதற்காக நிலச் சொந்தக்காரர் விதை அல்லது எருவினிமித்தம் சாகுபடிகாரருக்கு முன்பணம் எதுவாகிலும் கொடுத்திருந்தால், அந்த விதைக்குப் பிடித்த செலவு விஷயமாகவும் அந்த எருவிற்குப் பிடித்த செலவின் விஷயமாகவும் அல்லது 7-வது பிரிவைச் சேர்ந்த (c) பகுதி யின்படிச் சாகுபடிக்காரர் ஏற்றுக்கொள்ள வேண்டிய அந்த எருவின் பாகத்துக்குப் பிடித்த செலவின் விஷயமாகவும், மாசூலில் சாகுபடிக்காரரின் பங்கில் நிலச் சொந்தக்காரருக்கு முதன்மையான பாத்தியதை உண்டு.

மாசூல் தானியரூபமாயிருந்தால், மேற்சொன்ன பிர காரம் நிலச்சொந்தக்காரருக்குச் சேரவேண்டிய தொகையின் மதிப்புக்குச் சமமான அளவுள்ள ஷெ தானியத்தைக் சாகு படிக்காரர் மாமூலான களத்து மேட்டிலேயே அவருக்குக் கொடுத்துவிட வேண்டும்.

(4) நஞ்சைப் பயிர் வேலைகள் நடைபெறுமலும் அல் லது நடைபெற முடியாமலும் இருக்கிற நெல் பட்டமல்லாத பருவத்திலே, அடியிற்கண்ட ஷரத்துக்கள் பிரயோகப்படும்:—

(a) சாகுபடிக்காரர் தமது சொந்தப் பொறுப்பிலும் செலவிலும், தாம் விரும்புகிற மாமூலான இடை மாசூல் பயிர்களில் எதையாகிலும் பயிரிட உரிமையுள்ளவராவார்; ஆனால், அவர் இடைமாசூல் பயிரை என்ன விஸ்தீர்ணத்தில் பயிரிடுகிறாரோ அந்த விஸ்தீர்ணத்துக்குக் குறையாமலோ அரசாங்கத்தாரால் அறிக்கையிடப்படக்கூடிய விஸ்தீரணத்திலோ பசுந்தழை உரத்தைப் பயிரிடவேண்டும்.

(b) அப்படிப் பயிரிடப்பட்ட இடை மாசூல் பயிர்களில் சாகுபடிக்காரர், சாகுபடி செய்வதற்கும் அறுவடை செய்வதற்கும் பிடித்த எல்லாச் செலவுகளையும் கழித்துக் கொண்ட பிறகு எஞ்சி நிற்கிற மொத்த மாசூலில் ஐந்தில் ஒரு பாகத்தை (அல்லது கட்சிக்காரர்கள் இன்னும் குறைந்த வீதாசாரம் எதற்கேனும் ஒப்புக்கொண்டிருந்தால் அந்த வீதாசாரத்தை) நிலச் சொந்தக்காரருக்குக் கொடுக்கக் கடமைப்பட்டவராவார்.

(5) (1) முதல் (4) வரையிலுள்ள உட்பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள ஷரத்துக்களைவிட குறைவான அனுகூலமுள்ள ஷரத்துக்களைக்கொண்ட யாதொரு உடன்படிக்கையினாலும் சாகுபடிக்காரர் கட்டுப்பட்டவராக மாட்டார்.

9. **குத்தகைப் பத்திரம் எழுதுவது.**— (1) ஒவ்வொரு சாகுபடி முறையிலும், நிர்ணயிக்கப்பட்ட நமூனாப்படியுள்ள குத்தகைப் பத்திரம் மூன்று பிரதிகளில் நியாயமான காலத்துக்குள் எழுதிக் கையெழுத்திடப்படவேண்டும்; அந்தக் குத்தகைப் பத்திரத்தில் சாகுபடிக்காரரின் பெயரும் விலாஸமும் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தின் (பெயர் ஏதாகிலுமிருந்தால் அந்த) பெயரும் ஸர்வே நம்பரும் விவரமும் விஸ்தீர்ணமும், சாகுபடி முறையின் ஷரத்துக்களும் கண்டிருக்க வேண்டும்; அதில் நிலச் சொந்தக்காரர் அல்லது அவருடைய ஏஜெண்டும் சாகுபடிக்காரரும் கையெழுத்திட வேண்டும். ஷை மூன்று பிரதிகளில் ஒன்றை நிலச் சொந்தக்காரர் வைத்துக்கொள்ளவேண்டும்; மற்றொன்றை சாகுபடிக்காரர் வைத்துக்கொள்ள வேண்டும்; மூன்றாவது பிரதியை, சாகுபடிக்காரர் அதில் கையெழுத்துப்போட்ட தேதியிலிருந்து இரண்டு

வாரங்களுக்குள் நிலச் சொந்தக்காரராவது அவருடைய ஏஜெண்டாவது தாலூகா ஆபீஸில் வைக்கும்படிச் செய்ய வேண்டும்.

ஆனால், நிலச் சொந்தக்காரராவது சாகுபடிக்காரராவது குத்தகைப் பத்திரத்தை எழுதிக்கொடுக்க மறுத்தாலும் நியாயமின்றித் தாமதம் செய்தாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப, சாகுபடிக்காரராகிலும், நிலச் சொந்தக்காரராகிலும், அந்தப் பத்திரத்துடன், அதை எழுதிக்கொடுக்க மற்றக் கட்சிக்காரர் மறுத்துவிட்டரென்றேனும் நியாயமின்றித் தாமதம் செய்து விட்டாரென்றேனும் கண்டுள்ள உறுதிமொழியொன்றை எழுதி அந்த பத்திரத்தைத் தாலூகா ஆபீஸில் வைக்கலாம்.

(2) குத்தகைப் பத்திரத்துக்கு ஸ்டாம்பு எதுவும் ஒட்டவேண்டியதில்லை.

(3) யாதொரு சாகுபடி முறை விஷயத்தில், நிலச் சொந்தக்காரர் அல்லது அவருடைய ஏஜென்டாவது சாகுபடிக்காரராவது, (1) உட்பிரிவின் ஷரத்துக்களை அனுசரித்து குத்தகைப் பத்திரத்தில் கையெழுத்திட மறுத்தாலும் அதைப் பதிவில்வைக்க மறுத்தாலும், ரெவினியு கோர்ட்டார், சந்தர்ப்பத்திற்கேற்ப, நிலச் சொந்தக்காரருக்கேனும், சாகுபடிக்காரருக்கேனும் ஐம்பது ரூபாய்வரை அபராதம் ஒன்றை விதிக்கலாம்; அவ்வாறு விதிக்கப்பட்ட அபராதத்தை நிலவரி பாக்கியைப்போல் வசூலிக்கலாம்.

10. **சாகுபடிக்காரர்களை வெளியேற்றல்:**— (1) சாகுபடி செய்கிற சாகுபடிக்காரர் எவரையும் 6-வது பிரிவில் ஏற்பாடு செய்துள்ளபடியன்றி மற்றப்படியோ, அல்லது—

(a) 8-வது பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவில் சொல்லியிருக்கிறபிரகாரம் அவர் மாகூலைப் பங்கிட்டுக்கொள்ளத் தவறியிருந்தாலன்றி அல்லது 8-வது பிரிவைச்சேர்ந்த (3) உட்பிரிவின் ஷரத்துக்களை யனுசரித்து அந்த உட்பிரிவின்படி நிலச் சொந்தக்காரருக்குச் சேரவேண்டிய மாகூலின் அளவை அவருக்குக் கொடுத்துவிடத் தவறியிருந்தாலன்றி மற்றப்படியோ, அல்லது

(b) இச்சட்டம் செலவாணியாகத் தொடங்கிய பிறகு சேரவேண்டியதாய் ஏற்படுகிற யாதொரு 'ரெண்ட்'ஐ குத்

தகைப்பத்திரத்தில் திட்டமிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள்ளாவது, குத்தகைப்பத்திரம் எதுவும் இரா விட்டால் பிரஸ்தாப பிரதேசத்தின் அல்லது கிராமத்தின் வழக்கப்படி உரிய தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாவது, அவர் செலுத்தத் தவறியிருந்தாலன்றி மற்றபடியோ, அல்லது

(c) ஷை நிலத்தையேனும் அதிலுள்ள யாதொரு பயிரையேனும் அழித்துவிடக்கூடிய அல்லது கெடுத்துவிடக்கூடிய யாதொரு காரியத்தையேனும் அல்லது அசட்டையேனும் அவர் செய்திருந்தாலன்றி அல்லது அந்த நிலத்தைச் சாகுபடி செய்வதையே விட்டுவிட்டிருந்தாலன்றி மற்றபடியோ, அல்லது

(d) ஷை நிலம் எதற்காக அவரிடம் விடப்பட்டதோ அதற்கு மாறான யாதொரு காரியத்துக்காக அவர் நிலத்தை உபயோகித்திருந்தாலன்றி மற்றபடியோ, அல்லது

(e) அவர் நிலத்தைக் உட்குத்தகைக்கு விட்டிருந்தாலன்றி மற்றபடியோ அல்லது

(f) அவருடைய ஒழுக்கம் அல்லது நடத்தையை நோக்கும்போது அவரை நிலத்தில் சாகுபடிக்காரராக இன்னும் இருக்கவிடுவது நல்ல சாகுபடிக்கு உகந்ததல்லவென்று ஏற்பட்டாலன்றி மற்றப்படியோ,

(g) 6-வது பிரிவை யனுசரித்து சமரச உத்தியோகஸ்தராலாவது ரெவினியு கோர்ட்டாராலாவது விதிக்கப்பட்ட யாதொரு நிபந்தனையை அவர் அனுசரிக்கத் தவறியிருந்தாலன்றி மற்றப்படியோ

வெளியேற்றக்கூடாது.

(2) (a) இதன்பொருட்டு ரெவினியு கோர்ட்டாருக்குச் செய்து கொள்ளப்படுகிற விண்ணப்பத்தின்பேரிலன்றி மற்றப்படி இப்பிரிவின்கீழ் சாகுபடிக்காரர் எவரையும் வெளியேற்றக்கூடாது.

(b) அத்தகைய விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல், ரெவினியு கோர்ட்டார் அவ்விஷயத்தைக் குறித்து விசாரணை செய்து தங்களுடைய தீர்ப்பை அளிக்கவேண்டும்.

(c) 'ரெண்ட்' கொடுக்காத காரணத்துக்காக அல்லது 6-வது பிரிவையனுசரித்து விதிக்கப்பட்ட யாதொரு நிபந்தனையினால் கொடுக்கப்படத்தக்கதாய்ச் செய்யப்பட்ட

யாதொரு தொகையைக் கொடுக்காத காரணத்துக்காக சாகுபடிக்காரர் ஒருவரை வெளியேற்றும்படி விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன்பேரில், ரெவினியு கோர்ட்டார், வெளியேற்றுவதற்கான ஓர் உத்தரவைப் பிறப்பிப்பதற்குமுன், நிர்ணயிக்கப்பட்ட விதமாய் நோட்டீஸ் கொடுத்து அதன் மூலமாக, அந்த நோட்டீஸ் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள், பாக்கியாயுள்ள 'ரெண்ட்'-ஐ அல்லது தொகையையும் பிரஸ்தாப நடவடிக்கைகளுக்குப் பிடித்த செலவையும் நிலச்சொந்தக்காரருக்குக் கொடுக்கும்படி சாகுபடிக்காரருக்கு உத்தரவு செய்யவேண்டும்; சாகுபடிக்காரர் அந்த நோட்டீஸை அனுசரித்து நடக்காவிட்டால், ரெவினியு கோர்ட்டார் அவரை வெளியேற்றுவதற்காக உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

11. **பண்ணையாள்களுக்குக் கொடுக்கப்படத்தக்க கூலி.**—வேலை செய்த ஒவ்வொரு தினத்துக்காகவும் பண்ணையாள்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அடியிற்கண்ட விதமாகக் கூலி கொடுக்கப்படத் தக்கதாகும்:—

(a) இந்தச் சட்டத்தின் ஷெட்யூலில் மீண்டும் எடுத்தெழுதப்பட்டபடியுள்ள '1948-ம் வருஷம் அக்டோபர் 28-ம் தேதியுள்ள மாயூரம் உடன்படிக்கையில் கண்ட ஷரத்துக்களின் பிரகாரம், அல்லது

(b) தானிய ரூபமாக அடியிற்கண்ட வீதங்களின்படி:
வயது வந்த ஆண் வேலையாள் (முழு ஆள்) ஒவ்வொருவருக்கும் 2 மரக்கால் நெல்.
வயது வந்த பெண் வேலையாள் (முழு ஆள்) ஒவ்வொருவருக்கும் 1 மரக்கால் நெல்.
வயது வந்தவரல்லாத ஒவ்வொரு வேலையாளுக்கும் முக்கால் மரக்கால் நெல்.

பண்ணையாள் ஒவ்வொருவரும் விவசாய வருஷத்துக்காக இப்பிரிவில்கண்ட (a) பகுதியின்படியாவது (b) பகுதியின்படியாவது தமது கூலி கொடுக்கப்படவேண்டுமெனத் தம் விருப்பத்தைத் தெரிவிக்கலாம்; ஆனால், (b) பகுதியின்படிக் கூலி கொடுக்கப்படவேண்டுமென அவர் விரும்பினால், யாதொரு வகையைச் சேர்ந்த மாமூலான சலுகையையோ ஊதியத்தையோ கேட்க அவர் உரிமையுள்ளவராகமாட்டார்;

ஆனால், வயது வந்த ஆண் பண்ணையாள் ஒருவர் மேற்கண்டவைகளுடன்கூட ஒவ்வொரு அறுவடையின் போதும், மொத்த மாசூலில் ஒவ்வொரு கலத்துக்காகவும் அறுவடைப் பங்கிலே அரை மரக்காலாகிய தமது பங்கை (அல்லது நெல்லைத் தவிர்த்த மற்ற மாசூலின் விஷயத்தில் மொத்த மாசூலில் இருபத்து நான்கில் ஒரு பங்கை) ப்பெறுவதற்கு உரியவராவார்; மேலும், அவருக்கு மாமூல் பிரகாரம் மனைக் கொல்லைகள் கொடுக்கப்படவேண்டும்.

12. **பண்ணையாளை விலக்குதல்.**—(1) நிலச்சொந்தக்காரர் ஒருவர் ஒரு பண்ணையாளை விலக்கும்போதெல்லாம், அவர் அவ்வாறு விலக்கின தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள், பிரஸ்தாப பிரதேச விசாரணை அதிகாரமுள்ள சமரச உத்தியோகஸ்தருக்கு அதைப்பற்றி ரிப்போர்ட் செய்ய வேண்டும்.

(2) நிலச்சொந்தக்காரரிடமிருந்து அத்தகைய ரிப்போர்ட்டையாவது, இந்தச்சட்டத்தின் தொடக்கத்துக்குப் பிறகேனும் அத்தொடக்கத்துக்கு முன் 1952-ம் வருஷம் மார்ச்மீ 1-ம் தேதிக்கு முந்தியிராத எக்காலத்திலேனும் விலக்கப்பட்டிருக்கிற பண்ணையாளிடமிருந்து ஒரு பிராதையாவது வரப் பெற்றுக்கொள்ளும் சமரச உத்தியோகஸ்தர், நேரிடையாகவோ ஏஜென்ட் மூலமாகவோ தமக்குமுன் ஆஜராகி தங்கள் தங்களுடைய முறையீடுகளைத் தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரருக்கும் பண்ணையாளுக்கும் உத்தரவு செய்யலாம்.

(3) அவ்வாறு முறையீடுகள் எவையேனும் செய்து கொள்ளப்பட்டால் அவைகளைப்பற்றி ஆலோசனை செய்த பிறகும், பிரஸ்தாப விஷயத்தைக் குறித்துத் தமக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய விசாரணையை மேற்கொண்டு செய்த பிறகும், சமரச உத்தியோகஸ்தரானவர், பண்ணையாள் விலக்கப்பட்டிருப்பது நியாயமல்லவென்றும் சரியல்லவென்றும் தெரிந்து கொண்டால், தீர்ப்பு ஒன்றை எழுதி அதன் மூலமாக, பண்ணையாளை மீண்டும் வேலைக்கமர்த்திக்கொண்டு, அவரை விலக்காமலிருந்தால் அவருக்கு என்ன உரிமைகள் சேர்ந்து வந்திருக்குமோ அந்த உரிமைகள் எல்லாவற்றையும்

அவருக்கு மீண்டும் கொடுக்குமாறு நிலச்சொந்தக்காரருக்கு, உத்தரவு செய்யலாம்.

(4) (3) உட்பிரிவின்படி சமரச உத்தியோகஸ்தர் அளித்த தீர்ப்பின் பிரகாரம் நடக்க நிலச்சொந்தக்காரர் தவறிப்போனால், அவ்விஷயம் அறிவிக்கப்பட்ட ரெவினியு கோர்ட்டார் அத்தவறுதலைப் பற்றி அவர் அவசியமென்று கருதுகிற விசாரணை செய்த பிறகு, (3) உட்பிரிவின்படி பண்ணையாளுக்குச் சேர்ந்து வருகிற உரிமைகளுக்குப் பங்க மேற்படாமல் அவர் நிச்சயிக்கக் கூடியபிரதிபலன் தொகையை ஷை பண்ணையாளுக்குக் கொடுக்குமாறுநிலச் சொந்தக்காரருக்குக் கட்டளையிடலாம்.

(5) அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட பிரதிபலன் தொகையை நிலச் சொந்தக்காரர் பண்ணையாளுக்குக் கொடுக்கத் தவறிப் போனால், ரெவினியு கோர்ட்டார், பண்ணையாள் விண்ணப்பம் செய்து கொள்வதன்பேரில், அது நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே நிலச் சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப்பட்டுப் பண்ணையாளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(6) யாதொரு நிலச் சொந்தக்காரராகிலும் பண்ணையாளாகிலும், அடுத்த விவசாய வருஷம் கழிந்துபோகும் தேதியன்று முடிவடைகிற 12 மாதத்துக்கு குறையாத நோட்டிஸ் கொடுத்தாவது பரஸ்பர சம்மதத்தின் பேரிலாவது, ஷை உடன்படிக்கையை முடிவு செய்து கொள்ளலாம்; ஆனால், நிலச் சொந்தக்காரர் இவ்வுட்பிரிவின்படி அவ்வுடன்படிக்கையை முடிவுசெய்து விட்டால், அவர், ஆறுமாதக் கூலிக்குச் சமமான தானியம் அல்லது பணத்தையாவது, பரஸ்பரம் சம்மதிக்கக் கூடிய தொகையையாவது பண்ணையாளுக்குக் கொடுப்பதற்கு கடமைப்பட்டவராவார்.

(7) இப்பிரிவில், "நிலச் சொந்தக்காரர்" என்பதில் பண்ணையாள் ஒருவரை வேலையில் அமர்த்திக் கொண்டிருக்கிற சாகுபடி செய்யும் சாகுபடிக்காரர் என்பதும் அடங்கும்.

13. **தகராறுகளைத் தீர்ப்பது.**—(1) இச்சட்டத்திலே வேறு விதமாக வெளிப்படையாய் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, நிலச் சொந்தக்காரர் ஒருவருக்கும் சாகு

படி செய்யும் சாகுபடிக்காரர் ஒருவருக்கும் இடையிலாவது, அவர்களில் ஒருவருக்கும் பண்ணையாள் ஒருவருக்கும் இடையிலாவது, நிலச் சாகுபடி விஷயத்தில் அவர்களுடைய பரஸ்பர நல்லுறவைப் பாதிக்கிற யாதொரு விஷயமேனும், ஒரு சாகுபடி முறையின் ஷரத்துக்கள் பற்றியாவது 'ரெண்ட்' அல்லது கூலி கொடுக்கப்படுவது அல்லது கொடுக்கப்படாமலிருப்பது பற்றியாவது எழக்கூடிய யாதொரு பிரசினையேனும் உட்பட, ஏற்படுகிற தகராறை, எந்தக் கட்சிக்காரரேனும் விண்ணப்பம் செய்துகொள்வதன்பேரில், சமரச உத்தியோகஸ்தர் தீர்மானிக்க வேண்டும்.

உற்பத்தி செய்யப்படுகிற மாசூலையே பங்குபோட்டுக் கொள்கிறது என்ற ஏற்பாடு இல்லாமல் 'ரெண்ட்' கொடுப்பதைப்பற்றி ஏற்பாடாயிருக்கிற சாகுபடி முறையில், சாகுபடிக்காரரின் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் எவ்வருஷத்திலேனும் விளைச்சல் முழுவதுமோ சிறிதுமட்டிலோ தவறிப்போயிருக்கிற பட்சத்திலே, சாகுபடிக்காரரால் செலுத்தப்படத்தக்க 'ரெண்ட்' முழுவதையுமோ அதன் ஒரு பாகத்தையோ வஜா செய்யும்படி இவ்வுட்பிரிவின் பிரகாரம் அவர் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளலாம். அத்தகைய விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன் பேரில், சமரச உத்தியோகஸ்தரானவர் பிரஸ்தாப விஷயத்தின் சந்தர்ப்பங்களில் தாம் நியாயமென்று கருதுகிற அளவுக்கு 'ரெண்ட்' வஜா செய்யுமாறு உத்தரவிடலாம்.

(2.) (1) உட்பிரிவின்படி சமரச உத்தியோகஸ்தர் ஒருவரால் முடிவாகப் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவின் பேரில், பிறப்பிக்கப்பட்டதிலிருந்து முப்பது தினங்களுக்குள் விசேஷ சந்தர்ப்பங்களில் இக்காலத்துக்குள் அப்பீல்செய்து கொள்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை ரெவினியு கோர்ட்டார் மன்னித்து விட்டாலன்றி—அக்கோர்ட்டாருக்கு அப்பீல் உண்டு; அத்தகைய அப்பீலின்பேரில் ரெவினியு கோர்ட்டாருடைய தீர்ப்பு இறுதியானதாகும்.

(3) (1) உட்பிரிவின்படிக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றிலும், (2) உட்பிரிவின்படிக்கான அப்பீல் யாதாவது ஒவ்வொன்றிலும் ஒரு ரூபாய் மதிப்புள்ள கோர்ட் பீஸ் ஸ்டாம்பு ஒட்டப்பட்டிருக்கவேண்டும்.

(4) ரெவின்யூ கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்டு, சென்னை 1952-ம் வருஷத்து IV-வது அவசரச் சட்டத்திலாவது சென்னை 1952-ம் வருஷத்து VI-வது அவசரச் சட்டத்திலாவது கண்ட 13-வது பிரிவின்படி இறுதியானதாகிவிட்டிருக்கிற யாதொரு தீர்ப்பும் இப்பிரிவில் கண்டெதெதனாலும் பாதிக்கப்படமாட்டாது.

(5) சென்னை 1952-ம் வருஷத்து IV-வது அவசரச் சட்டத்திலாவது சென்னை 1952-ம் வருஷத்து VI-வது அவசரச் சட்டத்திலாவது கண்ட 13-வது பிரிவின்படி யாதொரு ரெவினியூ கோர்ட்டுக்குச் செய்து கொள்ளப்பட்டு, இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதியன்று பைசலாகாமலிருந்துவருகிற யாதொரு விண்ணப்பமானது, இச்சட்டத்தின்படி விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு விசாரணை செய்ய அதிகாரமுள்ள சமரச உத்யோகஸ்தருக்கு மாற்றப்பட்டு, அவரால், இச்சட்டத்தின்படியே விண்ணப்பம் செய்துகொண்டதுபோலவே பைசல் செய்யப்படவேண்டும்.

14. **சிவில் கோர்ட்டுகளின் அதிகார எல்லைக்குத் தடை:—** இந்தச்சட்டத்தின்படியாவது அதன் வியாபகத்துக்குள் அடங்குகிற வேறொரு விஷயம் சம்பந்தமாகவாவது அல்லது ரெவினியு கோர்ட்டாரால் அல்லது சமரச உத்தியோகஸ்தரால் அல்லது வேறு அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, தீர்ப்பு அல்லது தீர்மானத்தை ரத்துசெய்யும்படியோ மாற்றும்படியோ தொடரப்படுகிற வியாஜ்ஜியம் அல்லது இதர நடவடிக்கையையோ எந்த சிவில் கோர்ட்டும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

15. **தஞ்சாவூர் ஜில்லாவுக்கு வெளியே உள்ள பிரதேசங்களுக்கு பிரயோகப்படத்தக்க விசேஷ நிபந்தனைகள்:—**

(1) தஞ்சாவூர் ஜில்லாவுக்கு வெளியே அடுத்தாற்போலுள்ள யாதொரு பிரதேசத்தில் இந்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுவதாயிருந்தால், அதன் ஷரத்துக்கள், அரசாங்கத்தார் விளம்பர மூலமாக இதன் பொருட்டுக் குறிப்பிடக்கூடிய இணக்கங்கள், விலக்குகள், மாறுதல்கள் எவையேனுமிருந்தால் அவைகளுக்குட்பட்டுப் பிரயோகப்படும்

(2) அத்தகைய விளம்பரம் இந்த ராஜ்யத்தின் சட்ட சபையின் முன் 14 தினங்களாவது ஆஜரில் இருக்கவேண்டும்.

அதன் பிறகு அந்த சட்ட சபை, அந்த '**ஸெஷனில்**' செய்யக் கூடிய திருத்தம், ரத்து, மாறுதல்களுக்கு உட்பட்டு அது செலாவணியாகும்.

16. **விதிகள் செய்ய அதிகாரம்:**—(1) இந்தச் சட்டத்தின் காரியங்களை நிறைவேற்றுவதர்காகவும், அதிலும் முக்கியமாக அதன்படிப் பிறப்பிக்கப்பட்ட :உத்தரவுகள், தீர்ப்புகள் அல்லது தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும் அல்லது அமுல் நடத்துவதற்காகவும் அல்லது அதன் ஷரத்துக்களை அமுலுக்குக் கொண்டு வருகையில் ஏற்படக்கூடிய சந்தேகங்கள் அல்லது கஷ்டங்களை நீக்குவதற்காகவும் அரசாங்கத்தார், விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக விதிகள் செய்யலாம்.

(2) 1952-ம் ஞு டிஸம்பர்-மீ 31-ம் தேதிக்குப் பிறகு இப்பிரிவின்படிச் செய்யப்படுகிற சகல விதிகளும், அவைகள் அவ்வாறு செய்யப்பட்ட பிறகு, கூடியசிக்கிரத்தில், பதினன்கு தினங்களுக்குக் குறையாத கால அளவுக்கு இந்த ராஜ்யத்தின் சட்ட சபையாருக்குமுன் ஆஜரில் இருக்கவேண்டும்; மேலும், அவ்விதிகள் அவ்வாறு சமர்ப்பிக்கப்படுகிற ஸெஷனில் அச்சபையார் ரத்து அல்லது திருத்தம் மூலமாகச் செய்யக்கூடிய மாறுதல்களுக்கு அவை உட்பட்டவையாகும்.

விவரணம்—1952-ம் ஞு டிஸெம்பர்மீ 31-ம் தேதியன்ருவது அதற்கு முன்பாவது செய்யப்பட்ட எவ்விதிகளுக் கேனும் இவ்வுட்பிரிவு பிரயோகப்படமாட்டாது.

17. **சென்னை 1952-ம் ஞுத்து VI-வது அவசரச் சட்டம் ரத்தாவது.**—(1) தஞ்சாவூர் சாகுபடிகாரர்களையும் பண்ணையாள்களையும் பாதுகாப்பது பற்றிய (சென்னை 1952-ம் ஞுத்து VI-வது அவசரச் சட்டமாகிய) 1952-ம் ஞுத்திய (2-ம் நெ.) அவசரச் சட்டம் இதனல் ரத்து செய்யப்படுகிறது.

(2) சென்னை 1952-ம் ஞுத்திய IV-வது அவசரச் சட்டத்தினலாவது அதன் கீழாவது அல்லது சென்னை 1952ம் ஞுத்திய V-வது அவசரச் சட்டத்தின்படித் திருத்தியமைக்கப்பட்ட அந்த அவசரச் சட்டத்தினலாவது அதன் கீழாவது

அல்லது சென்னை 1952-ம் வருஷத்திய VI-வது அவசரச் சட்டத்தினாலாவது அதன்கீழாவது அளிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு செய்யப்பட்ட எந்த விதிகளேனும் பிறப்பிக்கப்பட்ட எந்த விளம்பரங்களேனும் உத்தரவுகளேனும், தீர்மானங்களேனும், தீர்ப்புக்களேனும், எடுத்துக்கொள்ளப்பட்ட எந்த நடவடிக்கையேனும் செய்யப்பட்ட எக்காரியமும், இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு செய்யப்பட்டவையாக அல்லது பிறப்பிக்கப்பட்டிருப்பவையாக அல்லது எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பவையாகவே கருதப்படும்.

ஷெட்யூல்

[II (a) பிரிவைப் பார்க்கவும்]

(1) பண்ணையாள்களுக்கு ஒரு மரக்கால் வீதமும், பெண் வேலையாள்களுக்கு $\frac{3}{4}$ மரக்கால் வீதமும் அன்றாடக்கூலி கொடுக்கப்படும்.

(2) அறுவடை, களவடி, சிண்டுமணி, சாத்துவா, நடவல் களவடி இதர வேலைகளுக்காக, அவர்கள் எந்த நிலப்பகுதிகளில் பண்ணையாள்களாக வேலை செய்திருக்கிறார்களோ அந்த நிலப்பகுதிகளின் மொத்த மாசூலில் $\frac{1}{7}$ பாகம் பண்ணையாள்களுக்கு கொடுக்கப்படவேண்டும்.

(a) இந்த $\frac{1}{7}$ பாகம் பிரிக்கப்படும்; 14 மரக்காலில் $1\frac{1}{2}$ மரக்கால் களவடி என்றும் 14 மரக்காலில் அரை மரக்கால் அறுவடைக் கூலி என்றும் நிச்சயிக்கப்படும்.

(b) பண்ணையாள் வயலைத் தாமே வேறு ஒருவர் உதவியின்றி அறுவடை செய்தால், மாசூலில் $\frac{1}{7}$ பாகத்தை அவர் பெறுவார்.

(c) வயலில் ஒரு பாகத்தை மட்டும் பண்ணையாள் அறுவடை செய்தால், தாம் அறுவடை செய்த மாசூலில் $\frac{1}{7}$ பாகத்தை அவர் பெறுவார்.

[d] சில இடங்களில் வெளியாள்களும் வேறு சில இடங்களில் பண்ணையாளும் அறுவடை செய்திருந்தால், வெளியாள்களுக்கு என்ன கூலி கொடுக்கப்பட்டபோதிலும்,

பண்ணையாள் 14 மரக்காலில் $1\frac{1}{2}$ மரக்காலைக் களவடியாகப் பெறுவார்.

(e) பண்ணையாள்கள் வெளியில் வேலை செய்து கொண்டு அதே சமயத்தில் தங்கள் பங்கைக் கேட்காதிருக்கும்படிச் செய்யும்பொருட்டு, அறுவடைக் காலத்திலே வேண்டுமென்றே வேலைக்கு வராதிருக்கிற ஒவ்வொரு தினத்துக்காகவும் தண்டனையாக களவடியிலிருந்து அல்லது அவருக்குச் சேரவேண்டிய மற்றவைகளிலிருந்து இரண்டு மரக்கால் கழித்துக் கொள்ளப்படும்.

(f) மிராசுதாருக்குச் சொந்தமான ஒரு வேலிக்கு ($6\frac{2}{3}$ ஏகராவுக்கு) மேற்படாத நிலத்திலிருந்து கிடைக்கும் மாசூலில் மாத்திரமே ஒவ்வொரு பண்ணையாளுக்கும் பங்கு உண்டு.

(3) போரடிப்பதற்காக பண்ணையாள்களுக்கு ஒரு மரக்கால் வீதம் அன்றாடக் கூலிக்கொடுக்கப்படும்; போரடி வேலையை அவர்கள் முடித்துவிட வேண்டும்.

(4) பண்ணையாள்களுக்கு மாமூல் பிரகாரம் மான்யங்கள் (மனைக் கொல்லைகள்) கொடுக்கப்படும்.



தஞ்சை சாகுபடிதார்—பண்ணையாள் சட்டத்தின்கீழ் ஏற்பட்ட விதிகள்.

(G. O. No. 3386—ரேவின்யூ 24-12-1952)

வி தி க ள்.

1. இவ்விதிகளுக்குதஞ்சாவூர்சாகுபடியாளர்-பண்ணையாள் பாதுகாப்பு விதிகள் 1952, என்று பெயரிடப்படும்.

2. இவ்விதிகளில் —

(i) 'சட்டம்' என்பது தஞ்சார் சாகுபடியாளர் பண்ணையாள் பாதுகாப்புச்சட்டம், 1952 (சென்னை 1952-ளு xiv வது சட்டம்) என்பதைக் குறிக்கும்.

(ii) 'நமூனு' என்பது இவ்விதிகளின் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கும் நமூனுவைக் குறிக்கும்.

(iii) 'ஸெக்ஷன்' என்பது சட்டத்தின் ஸெக்ஷனைக் குறிக்கும்.

3. ஸெக்ஷன் 9-ல் சொல்லப்பட்டிருக்கும் நிலச்சொந்தக் காரரின் ஏஜெண்ட் என்பவர், நிலத்தின் சொந்தக்காரரால் எழுத்து மூலம் அதிகாரம் கொடுக்கப்பட்ட நபராக இருக்க வேண்டும்.

4. ரெவின்யூ கோர்ட்டாருக்கும் சமரச அதிகாரிக்கும்

(i) சட்டத்தினுலோ சட்டத்தின்கீழோ அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களையும் கடமைகளையும் செய்து முடிப்பதன் பொருட்டு அவர்களுக்கு அவச்யமென்று தோன் றும் எந்த வேலையைச் செய்யவும், நேரிடையாகப் போய் 'இன்ஸ்பெக்ட்' செய்யவும் அதன் பொருட்டு எந்த நிலத்தின் மீதும் பிரவேசிக்கவும் அதிகாரமும்,

(ii) சாட்சிகளை சம்மன் செய்யவும் தஸ்தாவேஜி களைத் ஆஜர் செய்யச் சொல்லவும் அதிகாரம் உண்டு.

5. ரேவின்யூ கோர்டாருடையவும் ஸமரஸ அதிகாரி யினுடையவும் நடவடிக்கைகள் (Proceedings) சுருக்கமானவை யாகவும் (Summary)

(a) சம்மன் பிறப்பிப்பதிலும் சதாரா செய்வதிலும்

(b) கக்ஷிக்காரர்களையும் சாக்ஷிகளையும் விசாரிப்பதிலும்

(c) தஸ்தாவேஜிகளை ஆஜர் செய்வதிலுமாக

கூடியவரையில் ஸிவில் புரோஸிஜர் கோடு (Civil Procedure Code) 1908 இன் ஏற்பாடுகளுக்கு அடங்கியவைகளாகவும் இருக்கவேண்டும்.

6. (a) 6-வது ஸெக்ஷன் (1) அல்லது (2) படி சாகுபடி திரும்பக்கிடைக்கச் செய்து கொள்ளும் மனு 1-வது நமூனைப்படி இருப்பதுடன் அதிகாரமுடைய ஸமரஸ அதிகாரியிடம் (அவரில்லாவிடில் அவர் ஆபீஸ் தலைமை குமாஸ்தாவிடமும்) மனுதாரரால் நேரிலோ, ஏஜண்ட் மூலமாகவோ தாக்கல் செய்யப்படவேண்டும்; அல்லது ரிஜிஸ்தர் தபால் மூலமாகவோ அனுப்பப்படவேண்டும். மனுவின் பேரில், பெற்றுக்கொள்ளும் உத்யோகஸ்தர், தாக்கல் செய்த தேதியை குறித்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் 10—9—52க்கு முன்பு செய்து கொள்ளப்பட்ட மனுவுக்கு இவ்விதி பிரயோகிக்கப்படாது.

(b) ஸெக்ஷன் 6 (4) இன் கீழ் உத்திரவிடும் ஸமரஸ அதிகாரி தன் தீர்ப்புக்குள்ள காரணங்களை சுருக்கமாக எழுதி வைக்கவேண்டும்.

(c) ஷை (a) (b) உபவிதியில் கண்ட ஏற்பாடுகளை ஸெக்ஷன் 13 (1) கீழ்தகராறுகளைத் தீர்த்து வைக்கக் கோரி ஸமரஸ அதிகாரியிடம் கொடுக்கும் மனுவுக்கும் பொருந்தும்.

ஆனால் உபவிதி (a) என்பது ஸெக்ஷன் 13(5) இன் கீழ் ரெவின்யூ கோர்டாரால் ஸ்மரஸ அதிகாரிக்கு மாற்றப்படும் மனுவுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது.

(d) ஸெக்ஷன் 6 (5) படியோ 13 (2) படியோ செய்யப்படும் அப்பீலானது அதிகாரமுள்ள ரெவின்யூ கோர்ட்டு அதிகாரியிடமோ (அவரில்லாவிடில் அந்த கோர்டின் தலைமை குமாஸ்தாவிடம்) நேரிலோ ஏஜண்ட் மூலமாகவோ ரிஜிஸ்தர் தபால் மூலமாகவோ தாக்கல் செய்யப்பட வேண்டும். அதன்

பேரில் அந்த உத்யோகஸ்தர் தனக்கு கிடைத்த தேதியை குறித்துக் கொள்ள வேண்டும்.

7. ஸெக்ஷன் 8 (2) ன் கீழ் சாதாரண மொத்த மகசூலை நிர்ணயிக்க, ஸமரஸ அதிகாரி, பிரஸ்தாப நிலத்திலோ அல்லது சுற்று வட்டாரத்தில் அதே போன்ற வஸதிகள் உள்ள அதே போன்ற நிலத்திலோ, பாசனத்துக்கு ஸாதாரணமாக தண்ணீர் கிடைத்திருந்த காலத்தில் கிடைத்த விளைச்சலைக்காட்டக்கூடிய, சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர் எவராலும் ஆஜர் செய்யப்படும் வாய்மொழி, தஸ்தாவேஜி, சாக்ஷியத்தை கவனிக்க வேண்டும்.

8. ரொக்கமாக 'ரெண்ட்' கொடுபட வேண்டியதானல், மொத்த விளைச்சலில் 'ரெண்டாக' கொடுபட வேண்டிய பாகத்தை மதிப்பிட, பொருத்தமான 5 வருஷ கெடுவுக்கு முந்திய வருஷத்தில், அதே மாதத்தில் டிஸ்டிரிக்ட் கெஜட்டில் விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிற விலைப்படி கணக்கிட வேண்டும். அப்படி விலை விளம்பரம் செய்யப்படாமலிருந்தால் அதே மாதத்தில் அந்த ஊரில் நடை முதலில் இருந்த விலைப்படியே கணக்கிட வேண்டும்.

9. விளைச்சலைப் பங்கிட்டுக் கொள்வதில் ஏற்படும் தகராறுகள் சம்பந்தமாக மாகுலைத் தன் வசம் வைத்துக் கொள்ளும்படி ரெவின்யூ கோர்டாராலோ சமரஸ அதிகாரியாலோ அதிகாரம் கொடுக்கப்பட்ட நபருக்கு ஷை கோர்டாலோ அதிகாரியாலோ நிர்ணயிக்கப்படும் பிரதிப் பிரயோஜனம் கொடுக்கப்படும். அந்த மதிப்புக்குள்ள சமனை விளைச்சலை, விளைச்சலை பங்கிடு முன் மொத்த விளைச்சலிலிருந்து கழித்து எடுத்துக் கொடுக்கப்படும்.

10. ஒவ்வொரு சாகுபடி வகையிலும் (குறிப்பிட்ட 'ரெண்ட்' ஏற்பாடோ, வார ஏற்பாடோ), இச்சட்டம் நிறைவேறு முன் குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தாலும் எழுதிக் கொடுக்கப்படாவிட்டாலும், நான்காவது நமூனவில் கண்டபடி ஒரு குத்தகை பத்திரம், 1953-ஷ் பிப்ரவரி-மீ 23-உக்கு முன்னமோ அல்லது சர்க்காரால் சில விசேஷ சந்தர்ப்பங்களுக்கு அனுமதிக்கப்படும் தேதிக்குள்ளோ, எழுதி முடிக்கப்பட வேண்டும். புது குத்தகைச் சீட்டுகள் தேவையாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அவைகள் வியவஸாய ஆண்டின் ஆகஸ்ட் 1-உக்கு முன் எழுதி முடிக்கப்படவேண்டும்.

11. 9 வது ஸெக்ஷன்படி எழுதி முடிக்கப்படும் சீட்டுக்களை ரிஜிஸ்தர் செய்து கொள்வதற்காக, ஒவ்வொரு தாலூகா கச்சேரியிலும் கிராம வாரியாக அட்டவணை போட்டு அடியில் கண்ட விவரங்களுடன் ஒரு ரிஜிஸ்தர் வைக்கப்படவேண்டும்.

(1) தொடர்ந்த நம்பர்.

(2) கிராமப் பெயர்.

(3) நிலச்சொந்தக்காரர் பெயரும் விலாஸமும்.

(4) சாகுபடிதாரர் பெயர்.

(5) நிலத்தின் சர்வே நம்பரும் பெயரும்.

(6) சீட்டு எழுதப்பட்ட தேதி.

(7) சீட்டில் ஒரு கக்ஷிக்காரர் கையெழுத்திட்டிரா விட்டால் ...... உறுதிமொழித்தேதி.

(8) தாலூகா ஆபீஸில் சேர்ந்த தேதி.

(9) பெற்றுக்கொண்டதை தெரிவிக்கும் (Acknowledgment) பிறப்பித்த தேதி.

(10) குறிப்புகள் (தேதியும் அக்னலெட்ஜ்மெண்டை அனுப்பும் உத்யோகஸ்தரின் கையெழுத்துச் சுருக்கமும்.)

12. தாலூகா ஆபீஸில் ஷை குத்தகைச் சீட்டின் நகல் கிடைக்கப் பெற்றவுடன் தொடர்ச்சியாக அது ரிஜிஸ்தரில் பதிவு செய்யப்படும். அது கிடைத்த விவரமும் அது சம்பந்தமான ரிஜிஸ்தரிலிருந்து 1 முதல் 4 கலன்களின் சுருக்கமும் நிலச்சொந்தக்காரருக்கு தெரிவிக்கப்படும்.

13. ஸெக்ஷன் 10 (2) (a) யின் கீழ் சாகுபடியாளரை வெளியேற்றச் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு மனுவும் I-வது நமூனாப்படி இருக்க வேண்டும். மேலே 6 வது விதி (d) யில் விதிக்கப்பட்டபடி தாக்கல் செய்யப்படவேண்டும்.

14. (a) ஸெக்ஷன் 10 (2) (c)யில் கண்ட 'ரெண்ட்' பாக்கிக்கோ, மற்றத் தொகையையோ கேட்டுக்கொடுக்கப்படும் நோட்டீஸ் III நமூனாப்படி இருக்கவேண்டும்.

(b) விலாஸமிட்டவருக்கு நேரில் சேர்ப்பிக்கப்படுவதன் மூலமோ அல்லது அவர் காணப்படாவிட்டால் அவர் குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஓர் ஆண் நபரிடமாவது,

அல்லது அவர் வஸித்த கடைசியாகத் தெரிந்த இடத்தில் ஒட்டுவதன் மூலமாவது, அல்லது அவர் ரெவின்யூ கோர்ட்டின் அதிகார எல்லைக்கு அப்பால் வஸிப்பவராயின் அவர் கடைசியாக வஸித்ததாகத்தெரியும் விலாஸத்துக்கு ரிஜிஸ்தர் தபால் மூலம் அனுப்பப்பட்டாவது அந்த நோட்டீஸ் ஸதாரா செய்யப்படும்.

15. ஸெக்ஷன் 12-ன் கீழ் ஸமரஸ அதிகாரிக்கு அனுப்பப்படும் வேலையைவிட்டு பண்ணையாளை நீக்கிய ரிபோர்ட்டு ஆனது அடியில்கண்ட விவரங்களைக் காணவேண்டும்:—

(1) நிலச்சொந்தக்காரரின் பெயரும் விலாஸமும்.

(2) பண்ணையாளுடைய பெயரும், விலாஸமும்.

(3) பண்ணையாள் பெற்றுவந்த கூலி.

(4) பண்ணையாளாக வேலை பார்த்துவந்த கால அளவு.

(5) வேலையைவிட்டு நீக்கிய தேதி.

(6) நீக்கியதற்குள்ள எல்லாக் காரணங்களும்.

16. ரெவின்யூ கோர்ட்டார் முன் நடக்கும் எந்த நடவடிக்கையிலும் கக்ஷிக்காரரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட எந்த ஏஜண்டையும் கோர்ட்டார் அவருக்காக வாதாட அனுமதிக்கலாம். ஆனால் நடவடிக்கையின் எந்த தருவாயிலும் இடையே அனுமதியை கோர்ட்டு ரத்து செய்துவிடலாம்.

17. ரெவின்யூ கோர்டிலோ, ஸமரஸ அதிகாரியாலோ, அல்லது சட்டத்தின் கீழ் ஏற்பட்ட எந்த அதிகாரியாலாவது செய்யப்பட்ட உத்திரவு, தீர்ப்பு, மத்யஸ்ததீர்ப்போ அது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்கு குறையாத ஒரு ரெவின்யூ இலாகா உத்யோகஸ்தரால் நிறைவேற்றத்தக்கதாகும்.

நமூனா நெ. I
(விதி 6)
சேக்ஷன் 6 (1) அல்லது 6 (2) படி

சாகுபடி திருப்பிக்கிடைக்க செய்துகொள்ளும் மனு.

1. தாலூகாவின் பெயர்.
2. கிராமத்தின் பெயர்.
3. மனுதாரின் பெயர், விலாசம்.
4. நிலத்தின் சொந்தக்காரர் பெயர், விலாசம்.
5. நில விவரம்.

வரிசை நம்பர்.	ஸ்தலத்தின் பெயர்.	வகை: நஞ்சை புஞ்சை மானாவாரி	மொத்த விஸ்தீரணம்.	அதில் கேட்கப்படும் நிலத்தின் விஸ்தீரணம்.	சர்க்கார் பாசனம் பெற்றவையா
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
மொத்தம்.					

6. ஷை ஸ்தலங்களை ஏற்கெனவே எந்த ஏற்பாட்டின் பேரில் அனுபவித்துவந்தார் என்பது.
7. அனுபோகம் இழந்த தேதி.
8. 1951–'52 வியவசாய ஆண்டில் நிலம் எத்தகைய சாகுபடி முறையின் கீழ் சாகுபடி செய்யப்பட்டதென்பது.
9. மனு தேதியில் நிலத்தை வைத்திருப்பவர் பெயர், அவர் சாகுபடிக்கு ஏற்றுக்கொண்டிருக்கும் நிபந்தனை விவரம்.
10. குறிப்புகள் (சுருக்கமாக மனுதாரின் பிராது)

நமூனா நெ. II
(விதி 13)
சேக்ஷன் 10–வது படி

சாகுபடியாளரை அப்புறப்படுத்துவதற்கு மனு

1. தாலூகாவின் பெயர்.
2. கிராமத்தின் பெயர்.
3. மனுதார் (நிலக்காரன்) பெயர், முழு விலாசம்.
4. நீக்க வேண்டிய சாகுபடியாளர் பெயர், முழு விலாசம்.

5. நம்பர், ஸ்தலத்தின் ஸர்வே நெ. பெயர் (இருந்தால்); விஸ்தீரணம்.

6. சாகுபடி முறையின் தன்மையும் ஷரத்துக்களும்.

7. (சாகுபடியாளரை) நீக்க வேண்டிய காரணம்.

8. குறிப்பு (பிராது விவரம் சுருக்கமாக).

நமூனா நெ. III

[விதி 14 (a) விதியைப் பார்க்க]

ஸெக்ஷன் 10 (2) (x) படி "ரேண்ட்" பாக்கியோ அல்லது வேறு தொகையையோ செலுத்திவைக்க சாகுபடிதாரருக்கு

நோட்டீஸ்.

நீர் (நிலச் சொந்தக்காரர் பெயர்)
அவரிடம் சாகுபடியாளராயிருந்து அவருக்கு இந்த
விவசாய ஆண்டில் செலுத்தவேண்டியதான
(தானியம், ரொக்கம் எவ்வளவு என்பது காணவும்) செலுத்த தவறியிருப்பதாகவும், சட்டத்தின் 6-வது ஸெக்ஷன்படி விதிக்கப்பட்ட நிபந்தனைப்படி செலுத்தப்படவேண்டியதான ரொக்கம் ரூ. செலுத்த தவறிவிட்டீர் என்று கோர்ட்டுக்கு தெரிவிக்கப்படுகிறபடியால் இதன் மூலமாய் நீர் நிலச்சொந்தக் காரருக்கு மேலே சொன்ன தொகைகளையும், இந்த நடவடிக்கைக்கான செலவு தொகையான ரூ யும் இதுகண்ட 30 தினங்களில் செலுத்திவைக்கவேண்டும் தவறினால் உம்மை வெளியேற்ற உத்திரவிடப்படும்.

நமூனா IV

(10-வது விதி)

குத்தகைப் பத்திரம்.

(ஸெக்ஷன் 9-ன்படி)

(1) 195 வருஷம் மீ தேதி

தாலூகா கிராமம் நிலச்சொந்தக்காரரின் (விலாஸம்)

(பெயர்) (1)

(2) தாலூகா கிராமம் சாகுபடிக்காரர்

விலாஸம் சாகுபடிக்காரர் பெயர் (2)

இவர்களுக்குள் ஏற்பட்ட ஏற்பாடு என்னவென்றால்:—

இதனடியில் ஷெட்யூலில் விவரிக்கப்பட்டிருக்கிற நிலங்களை விவசாய ஆண்டு முதல் 5 ஆண்டு கெடுவுக்கு சாகுபடி செய்வதன்பொருட்டு நிலச்சொந்தக்காரரான ஷை 1-வது நபர் சாகுபடிக்காரரான 2-வது நபருக்கு கொடுக்கிறார். சென்னை 1952-ஆம் 14-வது சட்டமான 1952-ஆம் வருஷத்திய தஞ்சாவூர் சாகுபடிக்காரர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டமும் அதனடியாகப் பிறப்பிக்கப்பட்ட விதிகள் உத்திரவுகள் விளம்பரங்கள் இவைகளுக்கும் உட்பட்டு ஷை 1, 2 நபர்களுடைய உரிமைகளும் கடமைகளும் அடியில்கண்டபடி, அதாவது,

(1) சாகுபடிக்காரரால் செலுத்தப்பட வேண்டிய 'ரெண்ட்'.	அறுவடை போரடிக் கூலிகளைக் கழித்து மிஞ்சிய சாதாரண மொத்த மாசூலில் 5-ல் 3 ஆக கலம் (சொற்களில் எழுதவும்)
(2) அளக்கவேண்டிய தேதியும், அளவும்	குறுவை—கலம் நவம்பர் 15-க்குள் சம்பா—கலம் மார்ச்சு 15-க்குள் சொற்களில்

குறிப்பு:—தற்காலம் குருவை சாகுபடி செய்யப்படும் விஸ்தீர்ணத்தைவிட அதிக விஸ்தீர்ணத்தில், சம்பா நிலங்களில் குருவை சாகுபடி செய்யப்பட்டால், அதனல் ஏற்படும் அதிக விளைச்சலிலும் 5-ல் 3 பங்கு (அல்லது அதற்கு குறைவான வீதத்துக்கு கக்ஷிக்காரர்கள் ஒத்துக்கொண்டிருந்தால் அந்த வீதத்தை இங்கே எழுதவும்.) நிலச் சொந்தக்காரருக்கு கொடுக்கவேண்டும்.

(3)	பங்கிட்டுகொள்ளவேண்டிய இடமும், அளக்கும் அளவும்	வழக்கமான களம் சர்க்கார் முத்திரை மரக்காலால்.
(4)	சட்டத்துக்கு விரோதமில்லாத வேறு ஷரத்துக்கள்	(a) (b) (c)

என்று ஒத்துக்கொள்கிறோம்.

ஷேட்யூல்

ஸ்தல விவரம்.

1	2	3	4	5	6
டிஸ்டிரிக்ட்.	தாலூகா.	கிராமத்தில்.	சர்வே நெ.	பெயர்.	ஏக்ரா—ஸெண்ட் வேலி. மா. குழி.

சம்பா நிலம்.

குருவை நிலம்.

இதற்கு சம்மதித்து இருவரும் கையெழுத்திட்டோம்.

நிலச் சொந்தகாரர் / ஏஜண்டு கையெழுத்து.

சாகுபடிக்காரர் கையெழுத்து

ஷியார் என் முன்னிலையில் கையெழுத்திட்டார்.

(சாக்ஷி)

ஷியார் என் முன்னிலையில் கையெழுத்திட்டார்.

(சாக்ஷி)

வாரச் சீட்டு

(1952-ளு தஞ்சாவூர் சாகுபடிக்காரர் பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் 9-வது செக்ஷன்படி)

195 வருஷம் ஸ்ரீ தேதி

(1) நிலச் சொந்தக்காரர் :—

பெயரும் விலாஸமும் :

கிராமம் :

தாலுகா :

